CHENNAI FERTILITY CENTRE

(ANNEXURE 29)

# பங்கேற்பாளர் தகவல் தாளுக்கான மாதிரி
# பங்கேற்பாளர் தகவல் தாள்

**சென்னை ஃபெர்ட்டிலிட்டி சென்டர் மற்றும் ரிசர்ச் இன்ஸ்ட்டிடியூட்**

IHEC பார்வை எண். (அலுவலக பயன்பாட்டுக்கு) ____________________

இச்செயல்திட்டத்தோடு நோயாளிக்கு அல்லது ஆய்வு பங்கேற்பாளருக்கு அல்லது வயது முதிர்ச்சியடையாத இளவயது நபராக இருப்பின் அவனது / அவளது பெற்றோர் / காப்பாளருக்கு வழங்கப்படுகின்ற பங்கேற்பாளருக்கான தகவல்தாள் தரப்பட வேண்டும். பங்கேற்பாளர் தகவல்தாளை உருவாக்கும்போது சாமான்ய மனிதர்கள் பயன்படுத்துகின்ற எளிய நடையில் ஆங்கிலம் மற்றும் தமிழில், ஒரு விவரணை வடிவத்தில் கீழ்வரும் தகவலை ஆய்வாளர் ஆய்வு பங்கேற்பாளருக்கு வழங்கவேண்டும். அவர்களால் புரிந்துகொள்ளக்கூடியவாறு, வலைதளத்தில் தரப்பட்டிருக்கும் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியவாறு ஆய்வுத்தாளானது, பங்கேற்பாளர் / சட்டப்பூர்வமாக அங்கீகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிக்கு வழங்கப்படுவதாக இருக்கவேண்டும்:

ஆய்வின் தலைப்பு

ஆராய்ச்சி நிறுவனத்தின் / அமைப்பின் பெயர்.

1. ஆய்வின் நோக்கம்.
2. ஆய்வு நடைமுறைகள்.
3. பங்கேற்பில் வாய்ப்புள்ள இடர்கள்.
4. பங்கேற்பினால் ஏற்படும் ஆதாயப்பலன்கள்.
5. இரகசியம் பேணல்.
6. இழப்பீடு.
7. பங்கேற்பாளரின் உரிமைகள்.
8. தொடர்பு விவரங்கள்.
9. எடுக்கப்படும் இரத்த மாதிரியின் அளவானது (ஒரு முழு தேக்கரண்டி) குறிப்பிடப்பட வேண்டும்.
10. பரிசோதனைகளின் செலவுகள் மற்றும் ஆதாரம், டிஸ்போஸபிள், பொருத்தப்படும் சாதனங்கள் மற்றும் மருந்துகள் / ஊடுகதிர் புகாத்திரவம் ஆகியவை குறிப்பிடப்பட வேண்டும்.
11. மருந்துப்பொருளுக்கான ஆய்வாக இருக்குமானால்:
    a. மருந்துப்பொருளின் வேதியியல் பெயர்.
    b. ஆரம்ப, மருந்துப்பொருளின் உயிரி சமநிலை ஆய்வு / சான்றாதாரங்கள் வழங்கப்பட வேண்டும்.
12. உள்ளூர் மொழியில் வழங்கப்படும் மொழியாக்கம் துல்லியமானது என்பதற்கான சுய-சான்றாக்கம் தரப்பட வேண்டும்.

(ஆய்வுக்கு தொடர்புடைய விசாரணைகளுக்கு: முதன்மை ஆய்வாளரின் (PI) பெயர், தொலைபேசி எண்ணுடன் தொடர்பு விவரங்கள்)

(ஒரு ஆய்வு பங்கேற்பாளராக உரிமைகள் தொடர்பான விசாரணைகளுக்கு: உறுப்பினர் செயலாளர், IHEC, CFC & RI, சென்னை ஃபெர்ட்டிலிட்டி சென்டர் & ரிசர்ச் இன்ஸ்டிடியூட், அமைந்தகரை, சென்னை - 600030, தொலைபேசி: 044-45588822)